CIVIL SERVICES (MAIN) EXAM- 2023

**SKYC-B-TML**

# தமிழ் / TAMIL

## தாள் II / Paper II

## (இலக்கியம்) / (LITERATURE)

| | |
|---|---|
| கால அளவு : **மூன்று** மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : **250** |
| *Time Allowed : **Three** Hours* | *Maximum Marks : **250*** |

## வினாத்தாள் குறித்த அறிவுறுத்தல்கள்

**வினாக்களுக்கு விடையெழுதும், முன்பாகப் பின்வரும் அறிவுறுத்தல்களை அருள்கூர்ந்து படிக்கவும் :**

மொத்தம் **எட்டு** வினாக்கள் **இரண்டு பிரிவுகளாகப்** பகுக்கபட்டுள்ளன.

மொத்தத்தில் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினாக்கள் **1, 5** ஆகியவை கட்டாயம் விடையளிக்க வேண்டியவை. எஞ்சிய வினாக்களுள் பிரிவு ஒவ்வொன்றிலும் குறைந்தது **ஒரு** வினா தெரிவு செய்து **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ஒரு வினா/பகுதிக்கு உரிய மதிப்பெண் அதற்கு நேரே குறிக்கப்பட்டுள்ளது.

விடைகள் **தமிழில்** எழுதப்பட வேண்டும்.

வினாக்களில் குறிக்கப்பட்டுள்ள சொற்களின் எண்ணிக்கை வரம்பைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

விடையளிக்கப்பட்ட வினாக்கள் வரிசைமுறையில் கணக்கிடப்படும். ஒரு வினாவிற்கு ஒரு பகுதியே விடையெழுதப்பட்டிருப்பினும் கோடு இடப்பட்ட அவ்வினாவும் விடையளிக்கப்பட்ட வினாவாகக் கணக்கிடப்படும். விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்ட பக்கம் அல்லது பக்கத்தின் பகுதி தெளிவாகக் கோடு இடப்பட வேண்டும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

***Please read each of the following instructions carefully before attempting questions :***

*There are **EIGHT** questions divided in **TWO SECTIONS**.*

*Candidate has to attempt **FIVE** questions in all.*

*Questions no. **1** and **5** are compulsory and out of the remaining, any **THREE** are to be attempted choosing at least **ONE** question from each section.*

*The number of marks carried by a question / part is indicated against it.*

*Answers must be written in **TAMIL**.*

*Word limit in questions, wherever specified, should be adhered to.*

*Attempts of questions shall be counted in sequential order. Unless struck off, attempt of a question shall be counted even if attempted partly. Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.*

## SECTION A

**Q1. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** ***10×5=50***

(a) இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பற்றி வண்ணக்கன் பேரி சாத்தனார் கூறுவன யாவை ? *10*

(b) காலம் அறிந்து செயலாற்றுமாறு வள்ளுவர் ஏன் வலியுறுத்து கிறார் ? *10*

(c) துன்பமாலையில் கண்ணகியின் அவலம் எவ்வாறு விவரிக்கப்படுகிறது ? *10*

(d) கும்பகருணன் வதைப் படலத்தில் பேசப்படும் போர்க் கருவிகள் யாவை ? *10*

(e) ஆயர்கள் வாழ்வு திருப்பாவையில் எவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது ? *10*

**Q2. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

(a) குறுந்தொகையில் பேசப்படும் பரத்தமை ஒழுக்கதினை மதிப்பிடுக. *20*

(b) பாண்டிய மன்னனின் நற்பண்புகளாக இளங்கோவடிகள் கூறுவன வற்றைத் தொகுத்துரைக்க. *15*

(c) மாணிக்கவாசகர் தன் புலன் இன்பங்களைக் குற்றமாகக் கருதுவதற்கான காரணங்களை ஆய்ந்துரைக்க. *15*

**Q3. பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

(a) பரிசில் பெறாத ஆவூர் மூலங்கிழார் தன் உள்ளக் குமுறலை எவ்வாறு புலப்படுத்துகிறார் ? *20*

(b) போர்புரிகிறவர்கள் விரிவாக உரையாடிக் கொள்வதற்கான காரணத்தைக் கம்பராமாயணத்தின் வழி விவரிக்க. *15*

(c) திருமாலின் உருவத்தை ஆண்டாள் வருணிக்கும் திறத்தை விரித்துரைக்க. *15*

**Q4. பின்வருவனவற்றிற்கு இடம், பொருள், நயம் தருக :**

(a) “தண்ணம் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பாடும் மே” *20*

(b) “அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக் கொளல் வேண்டும்.” *15*

(c) “உண்பது நாழி; உடுப்பவை இரண்டே; பிறவும் எல்லாம்
ஓரொக்கும்மே.” *15*

## SECTION B

**Q5.** **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடை தருக :** *10×5=50*

(a) ஒருவரைப் பல்வேறு மாந்தர்களாக உருமாற்றம் செய்வதற்கான காரணங்களைக் கண்ணன் பாட்டு கொண்டு விளக்குக. *10*

(b) தனிமணிதன் உலகைத் திருத்தமுடியாது என்று மு. வரதராசனார் ஏன் கூறுகிறார் ? *10*

(c) கதாநாயகன் - வில்லன் என்ற காவிய மரபு சித்திரப்பாவையில் எவ்வாறு புனையப்பட்டுள்ளது ? *10*

(d) வர்க்கப்பார்வை ஜெயசாந்தன் சிறுகதைகளில் எவ்வாறு புலப்படுகிறது ? *10*

(e) வாலப் பகடை தன் தொழிலை வலியுறுத்துவதற்கான காரணங்கள் யாவை ? *10*

**Q6.** **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

(a) வணிக மரபுகளைக் குடும்ப விளக்கில் பாரதிதாசன் இணைத்திருப்பதற்கான காரணங்களை ஆராய்க. *20*

(b) தமிழகத்தின் தாழ்ந்த நிலைகளாக அண்ணா கருதுவனவற்றைத் தொகுத்துரைக்க. *15*

(c) தெம்மாங்குப் பாட்டின் உள்ளடக்கங்களைத் தொகுத்து விளக்குக. *15*

**Q7.** **பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

(a) “நா. காமராசனின் கறுப்பு மலர்களில் சமூகப் பிரக்ஞை” - கட்டுரை வரைக. *20*

(b) பாலியல் தொழிலைச் சமூகமே உருவாக்குகிறது என்ற கருத்தைச் சோ எவ்வாறு நிறுவுகிறார் ? *15*

(c) தமிழரின் நாட்டுப்புற இசை மரபுகளை விவரிக்க. *15*

**Q8. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

(a) ‘கண்ணன் என் தோழன்’ - என்ற பாடல்வழிப் புலப்படும் நட்பின் இலக்கணங்கள் - தொகுத்துரைக்க. *20*

(b) மாணிக்கம் - ஆனந்தி என்ற இருவருக்கிடையிலான உறவு எவ்வாறு அகிலனால் விவரிக்கப்படுகிறது ? *15*

(c) உடன்கட்டை ஏறும் மரபு முத்துப்பட்டன் கதையில் இடம்பெற்றதற்கான பண்பாட்டுப் பின்னணிகளை ஆராய்க. *15*